## ‘திராவிட மாடல்’ ஆட்சியில் பொருளாதார வளர்ச்சி இந்தியாவின் உச்சம்!

# உற்பத்தி - கட்டுமானம் - பயன்பாட்டுத் துறைகள் அபரிமிதமான வளர்ச்சி!

## 2024-25ல் 11.2% பொருளாதார வளர்ச்சியுடன் தமிழ்நாடு முதலிடம்!

**சென்னை, ஆக.15 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திராவிட மாடல் ஆட்சியில் பொருளாதாரம் வளர்ந்து, வளர்ந்து, வளர்ச்சியடைந்து இந்தியாவின் உச்சம் தொட்டுள்ளது என்றும், தமிழ்நாடு 14 ஆண்டுகளில் இல்லாத மாபெரும் சாதனையாக உற்பத்தி, கட்டுமானம் மற்றும் பயன்பாட்டுத் துறைகள் அபரிமிதமான வளர்ச்சியடைந்துள்ளது என்றும், 2024-25ல் 11.2% பொருளாதார வளர்ச்சியுடன் இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடம் பெற்று தேசிய சராசரியை விட தமிழ்நாடு மிகமிக அதிகம் வளர்ச்சியடைந்துள்ளது என்றும் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதுகுறித்து அரசின் செய்திக் குறிப்பு வருமாறு :-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சி 4 ஆண்டுகளில் படைத்துள்ள மகத்தான சாதனை குறித்து சென்னை பொருளாதார பள்ளியின் முன்னாள் இயக்குநர் கே.ஆர். சண்முகம் அவர்கள் ஆங்கிலப் பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையில் விவரித்துள்ளார். இது, ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை அண்மையில் வெளியிட்டுள்ள

2024-2025ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையிலான புள்ளி விவரங்களைக் கொண்டுள்ளது. இந்திய தேசிய சராசரியைவிடவும், மற்ற மாநிலங்களை விடவும் தமிழ்நாடு எந்தெந்த துறைகளில் கடந்த 4 ஆண்டுகளில் அபரிமிதமான வளர்ச்சி கண்டு பொருளாதார முன்னேற்றத்தில் ஒரு மகத்தான சாதனையை நிகழ்த்தியுள்ளது என்பதைப் புலப்படுத்துகிறது. அதன் விவரங்கள்:

இந்தியாவின் இரண்டாவது பெரிய மாநிலப் பொருளாதாரமான தமிழ்நாடு, வளர்ச்சிப் பட்டியலில் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது. புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளின்படி, 2024-25 ஆம் ஆண்டில் 11.2% உண்மையான பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்து, அனைத்து மாநிலங்களிலும் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இந்த இரட்டை இலக்க வளர்ச்சி, கடந்த 14 ஆண்டுகளில் மாநிலத்தின் சிறந்த வளர்ச்சியாகும். கடைசியாக 2010-11ல் 13.1% ஆக இது பதிவாகியிருந்தது. இது 6.5% என்ற தேசிய சராசரியை விட மிக அதிகமாகும்.

**உற்பத்தித் துறையில் மிக உயர்ந்த வளர்ச்சி விகிதம்**

இந்த அசாதாரண வளர்ச்சிக்கு முக்கிய காரணம் இரண்டாம் நிலைத் துறையாகிய உற்பத்தி, கட்டுமானம் மற்றும் பயன்பாட்டுத் துறைகள் ஆகும். உற்பத்தித் துறை 2023-24ல் 12.6% மற்றும் 2024-25ல் 14.7% என மிக உயர்ந்த வளர்ச்சி விகிதங்களைக் கண்டு, மாநிலத்தின் முக்கிய வளர்ச்சி இயந்திரமாகத் திகழ்கிறது.

**கட்டுமானத்துறையின் வளர்ச்சி**

கட்டுமானத் துறையும் இதே காலக்கட்டங்களில் முறையே 15.9% மற்றும் 11.6% வளர்ச்சியடைந்து குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது. இதன் விளைவாக, ஒட்டுமொத்த இரண்டாம் நிலைத் துறை 2023-24ல் 13.7% மற்றும் 2024-25ல் 13.4% வளர்ச்சி விகிதங்களைப் பதிவு செய்துள்ளது.

**சேவைத் துறைகளிலும் இரட்டை இலக்க வளர்ச்சி**

மூன்றாம் நிலைத் துறையான சேவைத் துறையும் 2023-24ல் 7.47% ஆக இருந்த வளர்ச்சி, 2024-25ல் 11.3% ஆக உயர்ந்து வேகமெடுத்துள்ளது. இத்துறைக்குள், மனை வணிகம் (ரியல் எஸ்டேட்) 7.33% என்பதிலிருந்து 12.42% ஆகக் கூர்மையான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. பொது நிர்வாகம், போக்குவரத்து, தங்கும் விடுதிகள் மற்றும் உணவகங்கள், மற்றும் இதர சேவைகள் போன்ற பிற சேவைத் துணைத் துறைகளும் 2024-25ல் இரட்டை இலக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

**வேளாண்துறை உள்ளிட்ட முதன்மைத் துறைகளின் செயல்பாடுகள்**

முதன்மைத் துறை (வேளாண்மை, கால்நடை, வனம் மற்றும் மர வளர்ப்பு, மீன்பிடித்தல் மற்றும் சுரங்கம் ஆகியவற்றை உள்ளடக்கியது) 2023-24ல் 1.2% ஆக இருந்த வளர்ச்சி, 2024-25ல் 3.2% என மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

**தேசிய அளவிலும், பிற மாநிலங்களை விடவும் தமிழ்நாட்டின் மாபெரும் சாதனை**

தேசிய மற்றும் பிற மாநிலங்களின் தரவுகளுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டின் உற்பத்தித் துறை தனித்து நிற்கிறது. 2024-25ல் இந்தியாவின் உற்பத்தித் துறை வளர்ச்சி 4.5% ஆக மட்டுமே இருந்தபோது, தமிழ்நாடு மிகமிக அதிகமாக 14.7% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இதேபோல், தமிழ்நாட்டின் கட்டுமானத் துறை வளர்ச்சியும் தேசிய சராசரியான 9.4% ஐ விட 11.56% என அதிகமாக உள்ளது. ஒப்பிடக்கூடிய தொழில் வளர்ச்சி பெற்ற மாநிலமான மகாராஷ்டிரா, உற்பத்தித் துறையில் 2023-24ல் 6.8% மற்றும் 2024-25ல் 4.25% என மிகக் குறைவான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன. அதன் கட்டுமானத் துறை வளர்ச்சி அந்த ஆண்டுகளில் முறையே 5.7% மற்றும் 6.8% ஆக இருந்தது. மகாராஷ்டிராவின் மனை வணிகத் துறை 2023-24ல் 9.5% மற்றும் 2024-25ல் 9% என ஒப்பீட்டளவில் சிறப்பாகச் செயல்பட்டாலும், அதன் ஒட்டுமொத்த உண்மையான பொருளாதார வளர்ச்சி 2023-24ல் 8%, 2024-25ல் 7.3% என மிதமாகவே இருந்தது, இது தமிழ்நாட்டின் வளர்ச்சியை விட மிகக் குறைவாகும்.



**கோவிட் காலத்திற்கு பின் வளர்ச்சியில் தமிழ்நாட்டின் திருப்புமுனை**

நான்கு ஆண்டுகால (2021-22 முதல் 2024-25 வரை) சராசரி உற்பத்தி வளர்ச்சி விகிதத்திலும் தமிழ்நாடு 9.4% உடன் நாட்டிலேயே முன்னணியில் உள்ளது. ஜார்க்கண்ட் (8.8%) மற்றும் கர்நாடகா (8.7%) அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன. இருப்பினும், நான்கு ஆண்டுகால சராசரி உண்மையான மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) வளர்ச்சியில், தமிழ்நாடு 8.6% உடன் ஆறாவது இடத்தில் உள்ளது. இது 2015-16 முதல் 2018-19 வரையிலான காலகட்டத்தில் 7.6% சராசரி வளர்ச்சியுடன் ஒன்பதாவது இடத்தில் இருந்ததை விட குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். கோவிட் 19க்குப் பிந்தைய காலம், தனது பொருளாதார அடிப்படைகளை வலுப்படுத்தி, உற்பத்தி சார்ந்த வளர்ச்சியில் நாட்டின் முன்னணியாக உருவெடுப்பதில் தமிழ்நாட்டிற்கு ஒரு திருப்புமுனையாக அமைந்துள்ளது என்பது தெளிவாகிறது.

**தொழில்துறையில் தமிழ்நாட்டின் சாதனை**

தமிழ்நாடு ஒரு தொழில்துறை மையமாக தனது நிலையைத் தொடர்ந்து உறுதிப்படுத்தி வருகிறது. 2024-25ல் இந்தியாவின் உற்பத்தி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 12.7% பங்களித்துள்ளது. சுமார் 40,000 தொழிற்சாலைகளுடன், தமிழ்நாடு இத்துறையில் முதலிடத்தில் உள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) துறையிலும் மாநிலம் முன்னணியில் உள்ளது. 25 லட்சத்திற்கும் அதிகமான பதிவு பெற்ற தொழில் நிறுவனங்களுடன், நாட்டில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது.

**மோட்டார் வாகனம், ஆயத்த ஆடைகள், தோல் பொருள்கள் உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடம்**

தமிழ்நாட்டின் முக்கியத் தொழில்களில் வாகனங்கள், ஆயத்த ஆடைகள், தோல் பொருட்கள், ஜவுளி, கணினிகள், மின்னணுவியல், ஒளியியல் பொருட்கள், மற்றும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவை அடங்கும். மோட்டார் வாகனங்கள், ஆயத்த ஆடைகள், மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் மாநிலம் முதலிடத்தில் உள்ளது. ஜவுளி, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், மற்றும் கணினி, மின்னணு மற்றும் ஒளியியல் பொருட்கள் உற்பத்தியில் இரண்டாம் இடத்தில் உள்ளது. பொறியியல் பொருட்கள், மின்னணுப் பொருட்கள், ஆயத்த ஆடைகள், பருத்தி நூல், கைத்தறிப் பொருட்கள் மற்றும் தோல் பொருட்கள் ஏற்றுமதியிலும் மாநிலம் முன்னிலையில் இருக்கிறது. பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் கரிம மற்றும் கனிம ரசாயனங்கள் பிற குறிப்பிடத்தக்க ஏற்றுமதிகளாகும்.

**உற்பத்தித்துறை வளர்ச்சியை ஊக்கப்படுத்திய புதிய தொழில் கொள்கை**

தமிழ்நாட்டின் புதிய தொழில்துறை கொள்கை 2021, தமிழ்நாடு குறைக்கடத்தி மற்றும் மேம்பட்ட மின்னணுவியல் கொள்கை, துறை சார்ந்த தொழிற்பூங்காக்கள், தொழிற்குழுமங்கள் மற்றும் தமிழ்நாட்டின் உலக முதலீட்டாளர்கள் மாநாடுகள் ஆகியவையும் உற்பத்தித் துறையின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்குப் பங்களித்துள்ளன.

**ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கு தமிழ்நாட்டின் உற்பத்தித்துறையே உந்து சக்தி**

வரலாற்று ரீதியாக, சேவைத் துறை தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்தி, மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 50% க்கும் அதிகமான பங்களிப்பைக் கொண்டிருந்தது மற்றும் 2005-06 மற்றும் 2011-12 க்கு இடையில் சராசரியாக 11.28% வளர்ச்சியை எட்டியது. ஆனால், 2012-13ல் அதன் வேகம் குறைந்தது. இருப்பினும், 2024-25ல் ஏற்பட்ட வலுவான மீட்சி, சேவைகள் துறையில் புதுப்பிக்கப்பட்ட வீரியத்தைக் குறிக்கிறது. சேவைத் துறையின் செயல்பாடு இருந்தபோதிலும், சமீபத்திய ஆண்டுகளில் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு இரண்டாம் நிலைத் துறையே, குறிப்பாக உற்பத்தித் துறையே, முக்கிய உந்து சக்தியாக உருவெடுத்துள்ளது !

பொருளாதாரத்தில் இரட்டை இலக்க வளர்ச்சி கண்டு திராவிட மாடல் ஆட்சி படைத்துள்ள வரலாற்றுச் சாதனை திடீரென நிகழ்த்தப்பட்டுள்ளது அல்ல! முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் குறிக்கோளாகக் கொண்டு 2030ல் தமிழ்நாட்டின் பொருளாதாரம் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சி பெற்ற மாநிலமாக உயர்த்திட வேண்டும் என இலக்கு நிர்ணயித்து அல்லும் பகலும் அயராத பாடுபட்டு வருகிறார்கள். அதன் காரணமாக தமிழ்நாடு படிப்படியாக முன்னேறி வருகிறது.

கடந்த காலங்களில் “இந்திய டுடே”, “சி. வோட்டர்” கருத்துக் கணிப்புகள் 13.2.2025 அன்று வெளியிட்ட ஆய்விலும், 2023-2024ஆம் ஆண்டிற்கான ஒன்றிய நிதி ஆயோக் அறிக்கையிலும், 2023-2024அம் ஆண்டிற்கான இந்திய ரிசர்வ் வங்கி ஆய்வறிக்கையிலும், 2022-2023ஆம் ஆண்டிற்கான ஒன்றிய அரசின் நிர்யாத் நிறுவனம் ஏற்றுமதி குறித்து வெளியிட்ட ஆய்வறிக்கையிலும், 2023-2024ஆம் ஆண்டிற்கான தேசிய இறக்குமதிஏற்றுமதி வர்த்தக ஆண்டாய்வு பதிவுகள் குறித்த அறிக்கையிலும், இந்திய உயர் கல்வி நிறுவனத்தின் ஆய்வறிக்கையிலும் தமிழ்நாடு மாநில திட்டக்குழு ஆய்வறிக்கையிலும் கூட தமிழ்நாடு பல பிரிவுகளில் இந்தியாவில் முன்னணி மாநிலமாக திகழ்கிறது என்ற விவரங்கள் குறிப்பிடப்பட்டு பாராட்டப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, 2024-2025ஆம் ஆண்டிற்கான ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறையின் திருத்திய மதிப்பீட்டு அறிக்கையில் தமிழ்நாடு 14 ஆண்டுகளில் இல்லாத உச்சத்தை எட்டியுள்ளது என்று குறிப்பிட்டிருப்பது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்குச் சிந்தனைகளுக்கு கிடைத்துள்ள மகத்தான வெற்றி என்பதையே உறுதிப்படுத்துகிறது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நிறைவுப் பேருரையாற்றுகிறார்!

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில 26வது மாநாடு!

### இரா.நல்லகண்ணு கொடியேற்றுகிறார்! தலைமை : இரா. முத்தரசன்! பொதுச் செயலாளர் டி.ராஜா– கூட்டணிக் கட்சியினர் பங்கேற்பு!

சென்னை, ஆக. 15-

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில 26வது மாநாடு இன்று (15.08.2025) வெள்ளி முதல் 18.08.2025 திங்கள் வரை சேலம் மாநகரில் நடைபெறுகிறது.

முதல் நாள் நிகழ்ச்சியாக காலை 8 மணிக்கு பிரதிநிதிகள் பதிவு, மங்கல இசை நடைபெறுகிறது. காலை 9.30 மணி அளவில் 25வது மாநாடு நடைபெற்ற திருப்பூரிலிருந்து எடுத்து வரும் கொடி பெறுதல், தியாகச் சுடர்கள் பெறுதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

காலை 10 மணி அளவில் மூத்த தலைவர் தோழர் இரா. நல்ல கண்ணு தோழர் பழனி சாமி ஆகியோர் மாநாட்டுக் கொடி ஏற்றுகின்றனர்.

காலை 10:30 மணி அளவில் பிரதிநிதிகள் மாநாடு தலைமை குழு தேர்வு மற்றும் அஞ்சலி தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

தொடக்க உரையினை பொதுச் செயலாளர் முன்னாள் எம்.பி.தோழர் டி.ராஜா நிகழ்த்துகிறார்.

காலை 11.30 மணி அளவில் அரசியல், அமைப்பு நிலை, செயல்பாட்டு அறிக்கைகள் அறிமுகம் செய்யப்படுகின்றன.

மதியம் 12:30 மணியளவில் தோழர்கள் அமர்ஜித் கௌர், டாக்டர் கே.நாராயணா, ஆரணி ராஜா, சி.எஸ்.வெங்கடாசலம், டி.எம்.மூர்த்தி ஆகியோர் அரசியல் விளக்க உரை நிகழ்த்துகின்றனர்.

மாலை 4 மணியளவில் சிறப்பு கருத்தரங்கம், கனவுகள் மெய்ப்பட எனும் தலைப்பில் தோழர் கே.சுப்பராயன் எம்.பி. தலைமையில் காங்கிரஸ் மூத்த தலைவர் எஸ்.பீட்டர்அல்போன்ஸ் சிறப்புரை ஆற்றுகிறார்.

16.8.2025 சனிக்கிழமை மாலை 4 மணி அளவில் வெல்க ஜனநாயகம் எனும் தலைப்பில் நடைபெறும் எழுச்சி மாநாட்டிற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் இரா.முத்தரசன் தலைமை வகிக்கிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு நிறைவுப் பேருரை ஆற்றுகிறார்.

மாநாட்டில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ., சி.பி.ஐ.(எம்) மாநிலச் செயலாளர் தோழர் பெ. சண்முகம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தோழர் தொல்.திருமாவளவன் எம்.பி., கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ., தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் தோழர் வேல் முருகன் எம்.எல்.ஏ., மக்கள் நீதி மையம் தலைவர் கமல்ஹாசன் எம்.பி., மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, சி.பி.ஐ.(மா-லெ விடுதலை) மாநில செயலாளர் பழ. ஆசைத் தம்பி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன், மனிதநேய மக்கள் கட்சி தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., ஆதித் தமிழர் பேரவை தலைவர் இரா.அதியமான் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

இரவு 7.00 மணியளவில் கலைமாமணி முனைவர் மேரி ஸ்டெல்லா இயக்கத்தில் கவிஞர் தமிழ் ஒளியின் வீராயி காவியம் நாட்டிய நாடகம் மற்றும் கருத்தரங்கம், கலை நிகழ்வுகளும் நடைபெறுகிறது.

17.8.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9:30 மணி அளவில் அறிக்கைகள் மீது விவாதம் நடைபெறுகிறது.

நிறைவாக தோழர் அ.மோகன் நன்றி கூறுகிறார்.

மாவட்ட செயலாளர் தோழர் அ.மோகன் தலைமை வகிக்கிறார்.

கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் டி.ராஜா உட்பட தலைவர்கள் பங்கேற்கிறார்கள். 18.08.2025ஆம் தேதி மாலை 4 மணி அளவில் சேலம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மைதானத்தில் மாபெரும் பேரணி – பொதுக் கூட்டத்துடன் நிகழ்வுகள் நிறைவு பெறுகின்றன.



தி.மு.க. குவைத் அயலக அணி சார்பாக இரங்கல் கூட்டம் நடைபெற்றது.இந்த கூட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவஞ்சலி “கலைஞர்102” என்கிற சாதனைப்புத்தகம் வெளியிடப்பட்டு புகழஞ்சலி செலுத்தப்பட்டது. குவைத் தி.மு.க. அயலக அணி நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

---

## விடுதலைத் திருநாள் விழா! தி.மு.க. தலைமைக் கழகம்

## அண்ணா அறிவாலயத்தில் இன்று (15.08.2025) காலை சரியாக 8.00 மணிக்கு தேசியக் கொடி ஏற்றப்படுகிறது!

இன்று (15.8.2025 - வெள்ளிக்கிழமை) இந்திய நாட்டின் விடுதலை திருநாளினையொட்டி, கடந்த ஆண்டுகளைப் போலவே, இந்த ஆண்டும் தி.மு.க. தலைமைக் கழகமான அண்ணா அறிவாலயத்தில் காலை சரியாக 8.00 மணிக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி. தேசியக் கொடி ஏற்றி வைக்கிறார்.

சென்னை வடக்கு - சென்னை வடகிழக்கு - சென்னை கிழக்கு - சென்னை மேற்கு - சென்னை தென்மேற்கு - சென்னை தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாள் : 15-08-2025.

தலைமைக் கழகம்,
தி.மு.க.